# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.24/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 4 | நாள் | : | 03.04.2025 |
| பெயர் | : | சுப்புக்கனி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 03rd day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழக்கடையம் மெயின்ரோட்டில் டீக்கடை நடத்தி வருகிறேன். அது அம்பாசமுத்திரம் தென்காசி மெயின்ரோடு ஆகும். நரசிம்மன் என்பவர் வீடு எங்கள் கடைக்கு எதிரே உள்ளது. அவர் பெட்டிக்கடை அதில் வைத்துள்ளார் அதில் டீக்கடையும் நடத்தினார். அவரிடம் பேசிக்கொள்வோம். நரசிம்மன் இறந்துபோனார். 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அவர் போலீசார் விசாரித்தபோது நாங்கள் எப்போதும்போல் கடையை திறந்து மாலையில் கடையை மூடிச் செல்வோம் என்றும் நரசிம்மன் மாலையிலும்

கடையைத் திறந்து வைத்திருப்பார் என்று சொன்னேன். நரசிம்மன் வீட்டில் என்ன நடந்தது என்று பார்க்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

போலீசார் என்னை விசாரித்தபோது நான் காலை கடையைத் திறந்து மாலை 7 மணி வரை கடை நடத்துவோம் என்றும் எதிரே நரசிம்மன் மனைவியை பிரிந்து அவரது பூர்விக வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றும் 26.08.2018 இரவு 7 மணிக்கு வழக்கம்போல் நான் கடையை அடைத்துவிட்டு எங்கள் வீட்டிலிருந்தபோது இரவு 11 மணிக்கு எங்கள் வீட்டின் முன்பாக TN05 AV4151 என்ற கருப்பு நிற பல்சர் பைக் ஓட்டி வந்த நபர் எங்கள் வீட்டின் முன்பாக நிறுத்தி நரசிம்மனிடம் சிறிது நேரம் பேசிவிட்டு இருந்துவிட்டு பின்னர் நரசிம்மன் வீட்டிற்குள் சென்றார்கள் என்றும் நானும் என் கணவரும் வீட்டிற்குள் சென்றோம் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் வழக்கம்போல் கடையைத் திறந்து வியாபாரத்தை துவக்கியபோது நரசிம்மன் கடையை திறக்கவில்லை என்றும் காலை 8.45 மணிக்கு நரசிம்மன் தம்பி ரகுநாத் எங்களிடம் வந்து மாடியில் அவரது அண்ணன் கொலை செய்து கிடப்பதாக தகவல் சொன்னார் என்றால் சரிதான். நாங்கள் அதன்பின்னர் நரசிம்மன் வீட்டில் சென்று பார்த்தபோது அங்கு நரசிம்மன் கை, கால் கட்டப்பட்டு இடது கண் புறுவத்திற்கு மேல் நெற்றியில் அடித்து கொலை

செய்யப்பட்டுக் கிடந்தார் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு

பயந்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.03 17:39:16 +0530